விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 055 வள்ளுவர் ஆண்டு 2053 தை 30 சனிக்கிழமை (12.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வவுனியா பல்கலைக்கழகம் ஜனாதிபதியால் திறப்பு



(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகம் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் 17 ஆவது பல்கலைக்கழகமாக கடந்த ஓகஸ்ட் மாதத் 15

# கொலையாளியே நாட்டின் ஜனாதிபதி

## கோட்டாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உறவுகள் வவுனியாவில் போராட்டம்





(03 ஆம் பக்கம் பார்க்க)

## வழக்குகளை விரைவாகத் தீர்க்க

# சட்டத்தில் திருத்தம்

## சபையில் நீதி அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

**குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கு வசதியாக குற்றவியல் சட்டத்தில் முன்விசாரணை முறையை அறிமுகப் படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் குறிப்பிட்டார்.**

பாராளுமன்றத்தில் நீதித் துறையுடன் தொடர்பு பட்ட குற்றவியல் நடவடிக் கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டார்.

நீதி அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், சட்ட சுயாதீனத்தை உறு திப்படுத்தும் வகையிலும் சட்டம் தொடர்பில் மக்களுக்குள்ள நம் பிக்கையை வலுப் 15

## கொரோனா
# 31 பேர் மரணம்
# +1,259 தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 31 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங் களின் மொத்த எண்ணிக்கை 15

## யாழில் இன்றும் மழை தொடரும் சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்றும் மழை தொடருவதற்கான சாத்தியம் காணப் படுவதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலைப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 08.30 மணி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் 15

## யாழ். மாவட்டத்திற்கான
# பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

புதுப்பிக்கப்பட்ட தேர்தல் பதிவேட்டின் கீழ், யாழ்.மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 6 ஆக 15

## அடுத்துவரும் நாட்களில்
# அமைச்சர் பசில் இந்தியா பயணம்

(கொழும்பு)

இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு அண்மையில் இந்தியா சென்று திரும்பிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸை 15

## கனடாவில் வேலையென போலியான பிரசாரம்
### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கனடாவில் வேலை வாய்ப்பு என சமூக ஊடகங்களில் பரவிவரும் போலியான ஆட்சேர்ப்பு மோசடி தொடர்பில் இலங்கையில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 15

### தனங்கிளப்பில்
## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் கடற்கரை ஓரமாக உள்ள காற் 15

## பால்மா, எரிவாயு, சிமெந்து, கோதுமை மா இற்கு தட்டுப்பாடு
### ஏனையவை கையிருப்பில் உள்ளது


(கொழும்பு)

சில அத்தியாவசியப் பொருட்களுக்கு சிறிய தட்டுப்பாடு காணப் பட்டாலும் ஏனைய அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் போதுமான அளவு கையிருப்பு இருப்பதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கு அத்தியாவசிய பொருட்களை தட் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23-02-1953

இறப்பு 24-01-2021

வைத்திய கலாநிதி

## தம்பிப்பிள்ளை சிங்க அரியரட்ணம்

திதி:- ஏகாதசி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது அப்பா
உங்கள் நினைவுகளை எம்மால் மறக்க முடியவில்லையே...
அன்பை நெஞ்சில் வைத்து கண்டிப்பை பேச்சில் காட்டி
எம்மை ஆளாக்கி வைத்தீரே
எம் உயிர் இருக்கும்வரை உங்கள்
நினைவுகளுடனேயே வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

(10133)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

10வருட வெற்றிகரமான சேவையில். FEB/2022
U.K மற்றும் கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது விசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நெடுங்குளம் வீதியில் (A9 வீதியிலிருந்து 500m) சிறிய வீட்டுடன் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை 50 இலட்சம் (தரகர் தேவையில்லை.)
(10091)
077 444 9119

வேலையாட்கள் தேவை
Legend of Arch Firm Consultant
நிறுவனத்திற்கு யாழ். மாவட்டத்திலும், வெளி மாவட்டத்திலும் உள்ள கட்டடங்களுக்கு மேசன், கூலி ஆட்கள் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(10136)
076 578 2957
076 986 9422

காணி விற்பனைக்கு
யாழ்.சாவகச்சேரி நகரத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
❖ சிவன் கோயில் அருகாமையில்.
❖ A9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில்.
❖ பஸ் நிலையத்தில் இருந்து 300 மீற்றர் தூரம்.
❖ றெயில்வே ஸ்ரேசனிலிருந்து 150 மீற்றர் தூரம்.
(10138)
077 658 5999
076 658 3621

# மரண அறிவித்தல்

## திரு.சின்னப்பா கனகரத்தினம்

{ஓய்வுபெற்ற வருமான வரி மதிப்பீட்டாளர்
(Retired Assessor, Income tax Department),
முகாமையாளர் - சுகர்னி மருத்துவ நிலையம்}

பிறப்பு: 12.01.1934 இறப்பு: 10.02.2022



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா கனகரத்தினம் நேற்று முன்தினம் (10.02.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் கல்யாணி (லண்டன்), கனகராசா (லண்டன்), காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயநேசன் (லண்டன்), குந்தவி (லண்டன்), Dr.சிவன்சுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr.தாரிக்கா, விதுஷன், சிவேந்தன், சிந்தூரி, காவியா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் வேலும்மயிலும், நவரத்தினசாமி, செல்வ விநாயகம், லோகநாயகி, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை சோளியவத்தை துன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துன்னாலை கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-3762)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடம் தந்த எங்கள் உறவுகள் எங்கே?

# ஜனாதிபதி வவுனியா விஜயத்தின்போது

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொந்தளிப்பு

(குருமன்காடு)

**வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று விஜயம் செய்த நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



(குருமன்காடு)

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்திற்கு ஜனாதிபதி சென்றிருந்த நிலையில் கறுப்புக் கொடிகளுடன் வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பல்கலைக்கழகம் முன்பாக சென்று போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர்.

இதன்போது பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பம்பைமடு சோதனை சாவடிப் பகுதியில் வைத்து பல்கலைக்கழகப் பகுதிக்கு செல்ல முடியாதவாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொலிஸ் தடுப்பை உடைத்து செல்ல முற்பட்டமையால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன்போது "காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும், போர்க் குற்றவாளியை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, சர்வதேச விசாரணையே தேவை" என அவர்கள் கோசம் எழுப்பியதுடன், பொலிஸாருடன் கடும் தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

கொலைக் குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம்.



எனவே அவரிடம் நாம் சில கேள்விகளை கேட்க வேண்டும். அதற்கு அனுமதி வழங்குமாறு போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இருமணி நேரத்திற்கும் மேலாக குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறாக நின்றனர். இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறி அழுது கோசமிட்டனர்.

அதில் ஒருவர் மயங்கி விழுந்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். (நி-5-250)

## சவுதி விமான நிலையம் மீது தாக்குதல் இலங்கையர் உட்பட 12 பேர் காயம்

(றியாத்)

சவுதி இராணுவ எல்லைக்கு அருகில் உள்ள விமான நிலையத்தை குறிவைத்து, ஏமன் கிளர்ச்சியாளர் ஆளில்லா விமானத்தை வெடிக்கச் செய்ததில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு பொறுப்பேற்றுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள், சவுதி இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட விமான நிலையத்தை குறி வைத்ததாகவும், பொதுமக்கள் அத்தகைய தளங்களில் இருந்து விலகி இருக்குமாறும் எச்சரித்துள்ளனர்.

அபா சர்வதேச விமான நிலையத்தை நோக்கி ஏவப்பட்ட ஆளில்லா விமானத்தை சவுதி பாதுகாப்புப் படைகள் அழித்ததாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளில்லா விமானம் இடை மறித்த போது பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை மற்றும் இரண்டு சவுதிக் குடிமக்கள் உட்பட 12 பொதுமக்கள் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

## அரச ஒசுசல ஊடாக இலவச மருந்து விநியோகம்

(கொழும்பு)

சுகாதாரப் பணியாளர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பின் காரணமாக மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகளை "அரச ஒசுசல"வில் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுகாதார அமைச்சருடன் அவர்கள் பேச்சு நடத்தியபோதும் அந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த பணிப்புறக்கணிப்புக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தடையுத்தரவும் விதிக்கப்பட்டுள்ளது.


இந்த உத்தரவு பெப்ரவரி 24 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைக்கு செல்லும் நோயாளர்களின் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்தமையை அடுத்தே இந்த உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## மரண அறிவித்தல்

### கார்த்தி கந்தசாமி

(கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்க ஓய்வுநிலை உத்தியோகத்தர்)



*கரவெட்டி மத்தி சம்பந்தர் கடையடியைப் பிறப்பிடமாகவும் வரணி இடைக்குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட* ***கார்த்தி கந்தசாமி*** *அவர்கள் 10.02.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்தி பார்வதி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற காசி கதிராத்தை தம்பதியரின் அன்பு மருமகனும், கிருத்திகா (வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்), அகிலன் (லண்டன்), நித்தியா (லண்டன்), சர்மிளா (சாவகச்சேரி பிரதேசசபை), காண்டீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகா (லண்டன்), விஜிந்தன் (லண்டன்), இரஞ்சிதகுமார், கம்சாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவிர்ஷா, பிரிஷிகா, சகிர்ஷ், வர்ஷிகா, மோனிஷன் மற்றும் பிரிஷ்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும். சின்னம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியை கள் (13.02.2022) நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*


இடைக்குறிச்சி,
வரணி.

குடும்பத்தினர்
0773336963

(c-3760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்கால ஒலிம்பிக் ஜேர்மனி முதலிடம்



சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்று வரும் குளிர் கால ஒலிம்பிக் போட்டித் தொடரின் பதக்க பட்டியலில், ஜேர்மனி தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது.

ஆறு தங்க பதக்கங்கள், மூன்று வெள்ளி பதக்கங்கள் என மொத்தம் ஒன்பது பதக்கங்களுடன் ஜேர்மனி முதலிடத்தை பிடித்துள்ளது.

நோர்வே, ஐந்து தங்க பதக்கங்கள், மூன்று வெள்ளி பதக்கங்கள் மற்றும் நான்கு வெண்கல பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஒஸ்திரியா, நான்கு தங்க பதக்கங்கள், ஐந்து வெண் கல பதக்கங்கள் மற்றும் நான்கு வெள்ளி பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. (4-6)

## கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2021

# விக்டோறி அணி கீழ்ப்பிரிவு இறுதிப்போட்டிக்கு தெரிவு

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் நடத்தும் 21 ஆம் ஆண்டிற்கான தொடர் மீண்டும் கடந்த 4ம் திகதி ஆரம்பமானது.

மூளாய் விக்டோறி அணியும் பற்றீசியன்ஸ் அணியும் மோதின்ர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியனஸ் அணி 25.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களை பெற்றனர். டிலக்ஸ்ன்-33, ஜவன்-26, வினுஷான்தீ-



(போட்டியின் சிறந்த வீரர்)

30 ஓட்டங்களை பெற்றனர். கஜீபன்-02, கஜானன்-01, ஜெராத்-02, நிதூஸன்-04 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 28.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை பெற்றனர். டானியல் 19, நிதூஸன்-45, ஐங்கரன் ஆட்டமிழக்காது-35, ஓட்டங்களை பெற்றனர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக நிதூஸன் (மூளாய் விக்டோறி அணி) தெரிவு செய்யப்பட்டார். (4)

## கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோருதல்

கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயத்தின் நிதியாண்டு 2021 இற்கான கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

விலைமனு ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :
25.02.2022 மு.ப. 10.00 மணி

விலைமனு பெற்றுக்கொள்ளும் இடம் :
அருள்மிகு ஸ்ரீ கிருஸ்ணர் ஆலய கருமபீடம்

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் :
077 288 0830, 077 599 4771, 077 669 2184

செயலாளர்
ஆலய பரிபாலன சபை,
அருள்மிகு ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயம், கிளிநொச்சி.

(C-3763)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

**ஒரு பரப்பு எட்டு இலட்சம்**

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்.
(வாகையடி சந்தி)

(10143)

**074 269 0854**


# ஐ.பி.எல்.ஏலம் இன்று ஆரம்பம்

15 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டிக்கான மெகா ஏலம் பெங்களூரில் இன்று, நாளை ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளது. இந்த ஏல ப்பட்டியலில் மொத்தம் 590 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 290 வீரர்கள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

வீரர்களின் அடிப்படை விலை ரூ.2 கோடி, ரூ.1½ கோடி, ரூ.1 கோடி, 75 லட்சம், 50 லட்சம், 40 லட்சம், 30 லட்சம், 20 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதிகபட்ச அடிப்படை விலையான ரூ.2 கோடிக்கு 46 வீரர்களின் பெயர் உள்ளது.

ஜூனியர் உலக கோப்பையை வென்ற இந்திய இளம் வீரர்கள் மீதும் ஐ.பி.எல். ஏலத்தில் அதிக எதிர்பார்ப்பு காணப்படுகிறது. (4-5)

## மரண அறிவித்தல்



### திரு. செல்லத்துரை நித்தியானந்தம்

கல்வளைப் பிள்ளையார் கோவில், பத்திரகாளி அம்மன் கோவில் (சண்டிலிப்பாய்) ஆகியவற்றின் முன்னாள் தலைவர்

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்தியடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நித்தியானந்தம் அவர்கள் நேற்று *(11.02.2022)* வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் நந்தினி, காலஞ்சென்ற பரராஜசிங்கம், மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், இராசசிங்கம் மற்றும் கலாநிதி எதிர்வீரசிங்கம் (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (செல்லக்கண்டு), ப்ரராசசிங்கம், செகராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசீந்திரன், நந்தினி (சுவிற்சலாந்து), சிவஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிவரதிகன், நிருத்திக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை *(13.02.2022)* ஞாயிற்றுக் கிழமை காலை அன்னாரின் சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்னைவாசா"
சண்டிலிப்பாய்

(10145)

தகவல்:
குடும்பத்தினர்


## யப்பான் சைக்கிள்

அறிவுள்ளோரின் தெரிவு

1. லேடீஸ் சைக்கிள்கள்
2. ஜென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்



இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு.
கழுவிப் பூட்டுதல், திருத்த
வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

**யப்பான் சைக்கிள் B பசார்**
கந்தரோடை றோட், T.P-078 615 5929
சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)


## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ள பின்வரும் திருப்பணி வேலைகளுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

**01. சிற்ப வேலை**
**02. தச்சு வேலை**
**03. மின்சார வேலை**
**04. வர்ணப்பூச்சு வேலை**

- விண்ணப்பப் படிவத்தினை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 19.02.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பவும்.

**முகவரி : பொதுச் செயலாளர், பரிபாலன சபை,
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.**

- ஆலய பசுக்களை பராமரிப்பதற்கு ஊழியர் வெற்றிடம் காணப்படுகின்றது.பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(3945)

மேலதிக விபரங்களுக்கு:-
**076 170 7073**

-பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி புறக்கணிக்கப்படும் நிகழ்வை நாமும் புறக்கணிக்கிறோம்-செல்வம் எம்.பி



(நெளுக்குளம்)

**வவுனியா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்காது சிங்களமொழி பதிக்கப்பட்ட கல்வெட்டை முன்னுரிமைப்படுத்தியதை கண்டிப்பதாகவும் இவ்வாறான தமிழ் மொழி புறக்கணிக்கப்படும் நிகழ்வில் கலந்து கொள்ளப்போவதில்லை என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் கரு த்துத் தெரிவிக்கையில், சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் முன்னுரிமை என ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற காலத்தில் இருந்தே தெரிவித்து வரும் நிலையில் அதன் ஒரு வடிவமாகவே இந்த செயற் பாட்டையும் நோக்க வேண் டியுள்ளது.

வடக்கு-கிழக்கில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை என அரசியலமைப்பு ரீதியாக தெரி விக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் வடக்கிற்கு வந்த நீதி அமைச்சரும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை என தெரிவித்திருந்த நிலையிலும் இவ்வாறான ஒரு சம்பவம் பல்கலைக்கழக வளாகத்தில் அரங்கேறியிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதுடன் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளாது புறக்கணிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (4-5-299)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 04 – 03 – 1951



மனதில் 13 – 01 – 2022

### அமரர். சிவம் கனகம்மா

அன்போடு உபசரித்து அனைவரையும் அனுசரித்து
பண்பாலே உலகாண்ட பத்தினியாள் போனதெங்கே!
நெஞ்சோடு உறவாகி நினைவினிலே நிலையாகி
நேற்று வரை உடனிருந்த நிறைந்த முகம் மறைந்ததெங்கே!
ஆற்றாது துயருழலும் அல்லலதைத் தந்து விட்டு
அவசரமாய் பிரிந்து விட ஆறிழைத்த ஆணையிதோ
தேற்றியொரு வார்த்தையதை திரும்பிவந்து சொல்லிவிட்டு
தெய்வத்தின் திருநிழலில் தீர்க்கமுடன் இளைப்பாறு!
ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

12.02.2022 இன்று சனிக்கிழமை இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

முத்துமாரி அம்மன் கோவிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(10029)

குடும்பத்தினர்.

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.05.1954

மறைவு 19.02.2005

அமரர்

### கருணைவேல் தேவநாயகி

பதினேழு ஆண்டுகள் கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்! காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

துவாளி வீதி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி (அருண்சோ மில் உரிமையாளர்)

(C-3759)

கணவர்– கருணைவேல்
பிள்ளைகள்– அரும்செல்வி,
சந்திரீகா, ஜனகன்

## இராசிபலன்

12.02.2022
தை 30, சனிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 5.37 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 7.53 மணிவரை
சுபநேரம் - 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் -9.34-11.04 மணிவரை

சந்திராஷ்டமம்- அனுசம்
வீம ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம்.

**துலாம்** உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** தொழிலில் வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு, பிரயாண பயமுண்டு.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கன்னி** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்புண்டு, ஏட்டிக்கும் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அடுத்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த நிலையில் குமுதினி, நெடுந்தாரகை படகுகள்

## போக்குவரத்திற்கு அல்லல்படும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த குமுதினி மற்றும் நெடுந்தாரகை ஆகிய படகுகள் பழுதடைந்து நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**




யாழ்பாணத்திலிருந்து 45 கிலோ மீற்றர் தொலைவில் தரைத் தொடர்பு கொண்ட புங்குடுதீவு குறிகாட்டுவானிலிருந்து ஏறத்தாழ 10கடல் மைல் தொலைவில் நெடுந்தீவு அமைந்துள்ளதுடன் தற்போது நெடுந்தீவில் 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4500 பேர் வரையில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இப்பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இதேவேளை ஆசிரியர்கள், பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவருமே இந்தப் படகு மூலம் பயணம் செய்யும் நிலையில் அந்த மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் வடதாரகை மட்டுமே நாளாந்தம் இரண்டு சேவைகளை வழங்கி வருகிறது.

இதனால் நெடுந்தீவுக்கான போக்குவரத்து பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. எனவே நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்து சேவைகளை உரியவாறு ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். (4-5-315)

## மாசிமக இலட்சார்ச்சனை

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மாசிமக இலட்சார்ச்சனை உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

உற்சவத்தில் தினமும் காலை 8 மணிக்குப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி பிற்பகல் 01 மணிக்கு நிறைவுபெறும்.

மாசிமக உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். (4-5-18)

## பன்னாட்டு அரங்க கதையாடல்

(குப்பிழான்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர்-13 நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வரை இரவு 7 மணிக்குப் புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களைச் சூம் செயலி இலக்கம்-647334 8261, கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும் என புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். (4-5-18)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிவநெறி கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் "தெய்வீகத் திருமுறைத் தேனமுதம்" நூல் வெளியீடு நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலில் நடைபெறவுள்ளது. (4-5)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் மாதாந்த "பௌர்ணமி விரதகால" சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு "பௌர்ணமி விரத மகிமை" என்னும் விடயப் பொருளில் சிவநெறிச் செம்மல் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சொற்பொழிவு ஆற்றுவார். (4-5)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை கட்டுவன் அகிலை சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தானத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஜப்பதாஷக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பாக இடம்பெறும். (4-5)




## சோலை வரியில் விலைக் கழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசத்தில் வாழும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு சோலை வரி அறவீட்டில் கொள்கை அடிப்படையில் விலைக்கழிவு கொடுப்பதற்கு நல்லூர் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்நிலையில் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உட்பட்ட பகுதிகளின் நிலத்தின் பெறுமானம் புதிதாக அளவீடு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கேற்ப வருமான வரி அறவீட்டிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையால் வறிய மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள பகுதியில் வாழும் வறிய மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் விலைக்கழிப்பு கொடுப்பது சிறந்தது எனவும் விலைக்கழிப்பு செய்வதால் கொரோனா பெருந்தொற்று காரணமாக பொருளாதாரத்தில் பின்நிலையில் உள்ள மக்களது நலன்கள் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பம் வலுவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(4-5)

## வாகன இலக்க தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2022.02.02 ஆம்திகதியாழ். மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

தற்போது காணப்படும் கொவிட்-19 நிலைமைகளின் கீழ் **https://dmtappointments.dmt.gov.lk** என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (4-5)

## வீதி சமிக்ஞைகள் அமைக்குமாறு பெற்றோர் வேண்டுகோள்

(கரணவாய்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வீதியில் வீதி சமிக்ஞைகளை அமைக்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதி புனரமைப்பு நிறைவடைந்து பல மாதங்கள் ஆகிய போதிலும் இன்னமும் வீதி சமிக்ஞைகள் போடப்படாததையிட்டு பெற்றோர் விசனம் தெரிவித்தனர். பாடசாலைக்கு முன்னால் பாதசாரிகள் கடவை உள்ளது. ஆனால் வேகக் கட்டுப்பாடு போன்ற வீதி சமிக்ஞை குறியீடுகள் குறித்த இடங்களில் இல்லை. எனவே அவற்றை விரைவில் அமைக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-60)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடான "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது வாராந்தம் சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி- 9.00 வரை இடம்பெறுகின்றது.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக "சருமம் மற்றும் கேசப் பராமரிப்பு" எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறுகிறது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID: 899852 82023 Pass code: 354485. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(பிரஸ்ஸல்ஸ்)

**தற்போது விதித்துள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை உடன் நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கடந்த திங்கட்கிழமை பிரஸ்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் கொரோனா பரவல் காரணமாக ஏற்பட்டுள் அந்நியச் செலாவணி பிரச்சினை காரணமாகவே இறக்குமதித் தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

நாடு எதிர்நோக்கும் அந்நியச் செலாவணி பிரச்சினை குறித்து அவ்வப்போது ஆய்வு நடத்தி வருவதாகவும், அந்த பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைத்தால், இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து முடிவெடுக்க முடியும் என்றும் இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்தனர். (நி-5)



## இங்கைக்கான அமெ.தூதுவராக ஜூலி சங் நியமனம்

(வோஷிங்டன்)

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும் சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகங்களிலும் முன்னர் பணியாற்றியுள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா:சூரி 9 செவ் 1 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: தச்சுப்பட்டறை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12273

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 28 சூரி 10 செவ் 6 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: உயர்தரம் கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12277

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 4
கி.பா: 52 சூரி.செவ் 11 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: கமம் சொந்த ரக்டர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12278

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 30¼ சூரி 12 செவ் 7 இல் உயரம்: 5'9"
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்
தொ.இ: B/12280

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: ரோகினி
கி.பா: சூரி 5 செவ் 10 இல் உயரம்:5'
தகைமை/தொழில்:அழகுபடுத்தல் (தனியார்)
எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவர் விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ:G/8247

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: சூரி 9 செவ் 10 இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: அழகு நிலையம்
எதிர்பார்ப்பு: சொந்தத்தொழில்
தொ.இ:G/8280

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: சூரி 10 செவ் 3 இல் உயரம்:5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு : அரச தொழில்
தொ.இ:G/8286

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: சூரி 9 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc (ஆசிரியர்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது சைவபோசனம் மட்டும்
தொ.இ:G/8298

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



### நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் மீள் சுழற்சி பொருட்கள் மற்றும் விவசாய தேவைக்கான இயற்கைப் பசளையாக்க கூடிய கழிவுகள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

நல்லூர் பிரதேச சபையின் இயற்கைப் பசளை நிலையம் மற்றும் ஆயுர்வேத மருந்தகங்களில் கையிருப்பில் உள்ள மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்களான கண்ணாடிப் போத்தல், பிளாஸ்ரிக் பொருட்கள், தகரப்பேணி மற்றும் உக்கக்கூடிய பசளையாகப் பயன்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. பொருட்களை அலுவலக நாட்களில் தலைமை அலுவலகத்தில் அனுமதியை பெற்றுபார்வையிடலாம்.

கூறுவிலை படிவக் கட்டணம்: ரூபாய் 100.00
கூறுவிலைப்படிவம் விநியோகித்தல்:
14.02.2022-02.03.2022 புதன்கிழமை பிற்பகல் 2.00 வரை
கூறுவிலைப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி:
03.03.2022 வியாழக்கிழமை மு.ப. 10.00
கூறுவிலைப்படிவம் திறக்கப்படும் திகதி:
03.03.2022 வியாழக்கிழமை மு.ப.10.30
கூறுவிலைப்படிவம் திறக்கப்படும் இடம்:
தலைமை அலுவலகம் நல்லூர் பிரதேச சபை.

**திரு.ப.மயூரன், தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை**
**021 222 2700** (C-3761)



### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் – புன்னாலைக் கட்டுவன் வீதியில் 5 1/2 பரப்புக்காணி
2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும்
பிரிக்கப்பட்ட நிலையில்
விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 700 மீற்றர் தூரத்தில்)
(10139)

**077 911 6983**
**077 288 0152**



PEOPLE'S BANK

### கேள்விப்பத்திர அறிவித்தல் மக்கள் வங்கி சுத்திகரிப்புச் சேவைக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000 ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2022 பங்குனி 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிவரை எந்தவொரு வார நாளிலும் மு.ப.9.00-பி.ப.4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2022 பங்குனி 09 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக் கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021 222 2602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021 222 2601/021 222 8602
(C-3751)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக பதவி வகித்தபோது கோப்புகளை கழிவறையில் கொட்டிய டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி வகித்த போது அலுவல் சார்ந்த கோப்புகளை கிழித்தெறிந்து வெள்ளை மாளிகையின் கழிவறையில் கொட்டியதாக தகவல் வெளியாகி உள்ளது.

புளோரிடாவில் உள்ள ட்ரம்பின் பண்ணை வீட்டில் இருந்து 15 பெட்டிகள் அரசு சார்ந்த ஆவணங்களை கடந்த திங்கட்கிழமையன்று அந்நாட்டின் தேசிய ஆவண காப்பக அலுவலகம் மீட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறிய ட்ரம்ப் இந்த ஆவணங்களை தன்னுடனே எடுத்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வெள்ளை மாளிகை ஆவணங்கள் கிழித்து எறியப்பட்டது கண்டறியப்பட்டதாகவும் அது குறித்து விசாரிக்க நீதித் துறையிடம் ஆவணக் காப்பகம் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# பள்ளத்தில் பாய்ந்த பேருந்து 20 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

## 33 பேர் காயம்



(லிமா)

பெரு நாட்டில் பயணிகள் பேருந்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்தனர்.

பெரு நாட்டின் வடக்கே பயணிகள் பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் பாய்ந்துள்ளது.

இந்த விபத்தில் 20 பேர் பலியாகியுள்ளதோடு 33 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

# இரண்டாவது தடவையாக தொற்றுக்குள்ளான இளவரசர்



(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ்"க்கு இரண்டாம் முறையாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இளவரசர் அலுவலக அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில், இளவரசர் சாள்ஸ் கொரோனா பரிசோதனை செய்து கொண்ட போது அவருக்கு தொற்று இருப்பது உறுதியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவர் தற்போது சுய தனிமைப்படுத்தலில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# அவுஸ்திரேலியாவை வெளுத்து வாங்கும் வானிலை

## மேற்கில் காட்டுத்தீ; கிழக்கில் கனமழை



(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் நிலவி வரும் கடுமையான வானிலை மாற்றம் காரணமாக காட்டுத் தீயும், மழையும் வெளுத்து வாங்கி வருகிறது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் பரந்த நிலப்பரப்பில் உள்ள புதர் நிலங்களில் காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறது. அதேநேரத்தில், நாட்டின் கிழக்குப் பகுதியில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது.

அவுஸ் திரேலியாவின் மேற்கு பிராந்தியத்தில் காட்டு தீ இன்னும் தீவிரமடையும் என மாநிலத்தின் தீயணைப்பு மற்றும் அவசர சேவை துறை அறிவித்துள்ளது. மேலும், சில உள்ளூர் பகுதிகளுக்குள் நுழையவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் வான்வெளியில் இல்லை - விஞ்ஞானிகள் தெரிவிப்பு

(கன்பரா)

வான்வெளியில் ஏலியன்கள் எனப்படும் வேற்றுக்கிரகவாசிகள் யாரும் இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியாவில் உள்ள SETI அமைப்பின் ஆய்வாளர்கள், மேற்கு அவுஸ்திரேலிய பாலைவனத்தில் உள்ள முர்ச்சிசன் வைட்ஃபீல்ட் அரே என்ற உலகின் மிக உணர்திறன் வாய்ந்த ரேடியோ தொலைநோக்கி மூலம் 144 வெளிக் கோள்களையும், ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களையும் ஆராய்ச்சி செய்தனர்.

சுமார் 7 மணி நேரம் நடத்தப்பட்ட நீண்ட ஆராய்ச்சியின் போது, நட்சத்திரங்கள் மற்றும் ஏனைய கோள்களில் இருந்து எந்த அதிர்வெண்ணும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

# எச்.ஐ.வியை கண்டு பிடித்த பிரான்ஸ் விஞ்ஞானி காலமானார்



(பாரிஸ்)

எச்.ஐ.வி. கிருமியைக் கண்டுபிடித்தது என்ற பெருமைக்குரிய பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி லூக் மாண்டாக்னியர் தனது 89 ஆவது வயதில் காலமானார்.

பாஸ்டர் நிறுவனத்தில் மூத்த ஆராய்ச்சியாளராக இருந்தபோது 1983 ஆம் ஆண்டு எச்.ஐ.வி. கிருமியைக் கண்டுபிடித்தார்.

எச்.ஐ.வி. வைரஸ் குறித்த கண்டுபிடிப்புகளை யார் முதலில் கண்டுபிடித்தது என்பது குறித்து காலே என்ற விஞ்ஞானியுடன் அவர் நீண்ட போராட்டம் நடத்தினார்.

இறுதியில் இருவரும் அந்த சாதனையைப் பகிர்ந்து கொண்டனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசை சக ஆய்வாளருடன் மாண்டாக்னியர் பகிர்ந்து கொண்டார்.

இந்நிலையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு பாரிஸில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# கொரோனா தடுப்பூசி போடாததால் 240 அமெரிக்க வீரர்கள் பணி நீக்கம்

(வோஷிங்டன்)

கொரோனாத் தடுப்பூசி போட மறுத்த அமெரிக்க கடற்படை வீரர்கள் 240 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க கடற்படையில் 240 வீரர்கள் கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி போட்டுக்கொள்ள மறுத்து விட்ட நிலையில் அவர்கள் பணி நீக்கம் செய்து படையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்காவில் கடற்படை வீரர்கள் 2021 நவம்பர் வரை தடுப்பூசி போட்டுக்கொள்ள அவகாசம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயத்துறை மூலம்
# தொழில் வாய்ப்புக்களை பெற்று கொடுக்க பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும்
## வவுனியாவில் ஜனாதிபதி கோட்டா



(குருமன்காடு)

**விவசாய துறையில் பாடத்திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களை பெற்று கொடுத்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்று கொடுக்க பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு அதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல நாட்டில் புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு இந்த பிரதேச மாணவர்களிடம் கையளிக்கப்படுவதில் பெருமையடைகிறேன்.

இந்த பல்கலைக்கழகம் ஊடாக இளமாணி பட்டங்களை மட்டுமல்ல, மேலதிக பட்டங்களையும், வேலை வாய்ப்புகளையும், வெளிநாட்டு வாய்ப்புகளையும் உருவாக்கி எமது இளைய சமுதாயத்துக்கு பெற்று கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்து செல்ல தயாராக வேண்டும்.

அதிகளவான மாணவர்கள் உயர்தரத்திலே சித்தியடைந்தாலும், அனைவரையும் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்க முடியவில்லை எதிர்காலத்தில் இந் நிலைமை மாற்றியமைக்கப்படும். பல்கலைக்கழகங்களில் பட்ட படிப்பு கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள் புதிது புதிதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் 30 வருட யுத்த நிலையை முடிவுக்கு கொண்டு வந்து எமது இளைய சமுதாயத்தை அபிவிருத்தி பாதையில் அழைத்து செல்ல உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன் என தெரிவித்தார். (4-5-250)

## கண் பரிசோதனை முகாம்

(தருமபுரம்)

கிளிநொச்சி 57 படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் தர்மபுரம் இலக்கம் 1 அ.த.க பாடசாலையில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை மக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட உள்ளது.

குறித்த முகாமில் மக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு இராணுவத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (4-5-316)

## நிர்வாகசபைத் தெரிவு

(குப்பிழான்)

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி வித்தியாசாலையின் தையல்பாகர் அரங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் வி.கவிச்செல்வன் தலைமையில் இடம் பெறும். (4-5-18)

# கொக்கிளாய் கிராமத்தில் 1000 ஏக்கர் காணி அபகரிப்பு
## கிராம மக்கள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட கொக்கிளாய் கிராமத்தில் சுமார் 1000 ஏக்கர் மக்களின் பூர்வீக நில ங்கள் கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்க நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான மக்களின் விவசாய செய்கைக்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் தோட்ட செய்கைக்கான நிலங்கள் குடியிருப்பு நிலங்கள் உள்ளடங்கலாக இவ்வாறு அளவீடு செய்யும் நடவடிக்கையினை நில அளவை திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளதாக கொக்கிளாய் மக்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே கொக்கிளாய் கிழக்கு பகுதியில் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் பூர்வீக காணிகளை எந்த வித முன்னறிவித்தலோ இழப்பீடோ வழங்காது கையகப்படுத்தி இல்மனையிட் அகழ்வை ஆரம்பித்துள்ள கனிய மணல் கூட்டுதாபனம் தற்போது மேலும் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையாக இவ்வாறு முன்னறிவித்தல் எதுவுமின்றி நில அளவை செய்து எல்லைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (4-5-281)

# நில அபகரிப்பிற்கு எதிராக இன்று போராட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான கிராமங்களில் கிராம மக்களின் சுமார் 1000 ஏக்கர் பூர்வீக நிலங்களை கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்க நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த நில அபகரிப்பிற்கு எதிரப்பு தெரிவித்து கொக்கிளாய் கிராம மக்களால் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி க்கு கொக்கிளாய் பாடசாலை முன்பாக எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் கொக்கிளாய் எல்லை கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-281)

# மக்கள் குறைகளை கேட்டறிந்தார் கோட்டா



(குருமன்காடு)

வவுனியாவிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மக்கள் குறைகேள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது காணிப்பிரச்சினை, விவசாயப் பிரச்சினை மற்றும் அவர்களது தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார். (4-5-250)

# முல்லைத்தீவில் அதிகரிக்கும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி

(கண்டாவளை)

முல்லைத்தீவு, திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்றும் இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் எல்லைப் பகுதியிலும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் எல்லைப்பகுதியிலும் அமைந்துள்ள முல்லைத்தீவு, திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது என்றுமில்லாதவாறு சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க மதுவரித்திணைக்களம் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இதுவரை உதவி கோரவில்லை

## சர்வதேச நாணய நிதியம் மீண்டும் அறிவிப்பு




(கொழும்பு)

இலங்கையில் இருந்து இது வரை நிதி உதவிகள் தொடர்பில் கோரிக்கைகள் எவையும் முன்வைக்கப் படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் மீண்டும் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் குழு, இலங்கையுடன் நான்காவது ஆலோசனைகளை நிறைவு செய்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் கெரிரைஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து சர்வதேச நாணய நிதியத்துக்கு உதவிக்கான கோரிக்கை எவையும் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிடம் இருந்து நிதியுதவிகளுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டால், அது தொடர்பில் விவாதிக்க தயாராக இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் கெரிரைஸ் தெரிவித்தார். (நி-5)

# நயினாதீவு ரஜமஹா விகாரை

## புனித பூமியாக மார்ச்சில் பிரகடனம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் புனித பூமி மற்றும் தொல்லியல் தலங்களில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்த்து அவற்றிலுள்ள கல்வெட்டுகளை எதிர்கால தலைமுறையினருக்காக பாதுகாக்க வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது பிரதமர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வினை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்துவதற்கு பிரதமரின் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (நி-5)

# 'காதலுக்கு ஒரு மரம்' சுற்றாடல் அமைச்சு திட்டம்

(கொழும்பு)


காதலர் தினத்தில் மரங்களை நடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

காதலர் தினத்திற்கு புதிய அர்த்தம் சேர்க்கும் அதேவேளையில், பெப்ரவரி 14 ஆம் திகதி 'காதலுக்கு ஒரு மரம்' என்ற எண்ணக்கருவில் மரம் நடும் திட்டத்தை அறிமுகப்படுத்த சுற்றாடல் அமைச்சு முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டும் காதலர் தினத்திற்காக இதேபோன்ற மரம் நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அன்றைய தினம் 50,000 மரக் கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# தினம் ஒரு சுயமுன்னேற்ற சிந்தனைத் தேன்

## நாம் சாதிக்கப் பிறந்திருக்கிறோம்!



தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும்.

கன்ஃபூஷியஸ்

முதலில் என்ன வேண்டும்? நம்பிக்கை. அதுவும் உன் மீது உனக்கே நம்பிக்கை. வாழ்க்கை மீது-இந்த உலகம் மீது... உன்னைச் சார்ந்தவர்கள் மீது... நீ சாதிக்கப் போகும் செயல் மீது... முடியும், நம்மால் நிச்சயம் முடியும் என்கிற நம்பிக்கை. ஆம், நம்பிக்கை மட்டும் இருந்தால் எந்தச் செயலிலும் தோல்வியில்லை.

ஆகட்டும், நம்பிக்கை வைத்துவிட்டாய், பிறகென்ன? தெளிவு. தெளிவான சிந்தனை. குழப்பம் தோல்விக்கு முதல்படி, பாரதிகூட அன்னையிடம் தெளிந்த நல் அறிவு வேண்டும் என்றே வேண்டுவான்.

அத்தோடு துணிச்சல், இந்த மூன்றும் சேர்ந்தால் இந்த உலகம் உன் காலடியில், உன்னால் எதையும் சாதிக்க முடியும். முடியும் என்ற நம்பிக்கை உன் மனதில் எழுந்த உடனேயே பாதி வெற்றிக்கு தெளிவு-துணிச்சல் வேண்டும்!

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

சுபாஷ் சந்திரபோஸ்.

கலங்காதே, மயங்காதே, தயங்காதே, தோல்விக்கு துவளாதே, செல், தொடர்ந்து செல், எது வரினும் ஏற்போம் என திடமாக உன் மனதிடம் சொல். என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே என்று தோல்வியை ஏளனம் செய்.

துன்பத்திலும் சரி, தோல்வியிலும் மகிழ்ச்சி கொள். பிறிதொரு பெரிய வெற்றிக்கே இந்த தோல்வி என உன் மனதை சமாதானப்படுத்து.

படி, நிறையப்படி, அலெக்ஸாண்டரின் அற்புத சாதனையைப் படி, நெப்போலியனின் துணிவைப் படித்துப் போற்று. வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையை உனக்கு பாடமாக்கு. உனக்கு வழி காட்டவே உலக வரலாறு உதவுகிறது.

கடந்த கால ஞானிகள் வாழ்ந்தது உனக்காக. அவர்களின் அனுபவமும் அறிவுரையும் உனக்கு வேதமாகட்டும்.

உன்னால் எதைச் செய்ய முடியாது என்று மற்றவர்கள் சொல்கிறார்களோ... அதை செய்து காட்டுவது தான் மிகப் பெரிய இன்பம்.

-வால்டேர்

நீ சாதிக்கப் பிறந்தவன். உன்னால் முடியாதது எதுவும் இல்லை. மற்றவர்கள் விமர்சனம் கண்டு சலிப்பும் வேண்டாம், கோபமும் வேண்டாம். அதை சாதி. சாதித்துக் காட்டு.

வெற்றிக்குப் பின்பு–

முடியாது என்றீர்களே... இதோ பாருங்கள் என் சாதனையை என்பது போலப் பாருங்கள். சொல்லக்கூட வேண்டாம்.

அப்போது கிடைக்கிற இன்பம் மிகப் பெரிய இன்பம். ஃபிரான்ஸ் நாட்டு ஞானி பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமான தத்துவஞானி வால்டேர் உனக்காகச் சொன்ன உண்மை மொழி இது.

தன்னம்பிக்கை.
கலங்காத உள்ளம்.
நம்பிக்கை.

இந்த மூன்றையும் சேர்த்து சாதித்துக் காட்டு. நீ சாதிக்கவே படைக்கப்பட்டாய். பிறர் சோதிக்கலாம். அதை ஊதித் தள்ளு. எழுந்து நில். தொடர்ந்து செல். தோல்வியை வெற்றியின் படிக்கட்டாக்கு. பாதை கரடுமுரடாக இருந்தாலும், காலே செருப்பாக துணிவே மனமாக அணிந்து கொண்டு நட நட

அதோ வெளிச்சம்
அது – வெற்றியின் வெளிச்சம்.

இரவு நீளாது. நிச்சயம் பகல் வரும். இருள் விலகும். ஒளி பிறந்தே தீரும். கிழக்கில் நம்பிக்கையாய் வருவது – சூரியன் மட்டுமல்ல...

[illegible]

(முற்றும்)

# திங்கள் வரை மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

மின்சாரத்துக்கான கேள்வியை தடையின்றி பூர்த்தி செய்வதற்கு தேவையான அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்தார்.

எனவே, நாளை மறுதினம் வரை மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்படமாட்டாது என வும் எவ்வாறாயினும், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதில் நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 650 | 550 | 600 |
| தக்காளி | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 200 | 220 | 250 |
| கரட் | 560 | 550 | 600 |
| பூசணி | 150 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 170 | 160 |
| பாகற்காய் | 250 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 350 | 320 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 250 | 280 | 300 |
| கறிமிளகாய் | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | - | 250 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 240 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 70 | 140 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒத்தி வைக்கும் எண்ணம் அரசிற்கு இல்லை-நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

**தேர்தலை ஒத்தி வைக்கும் நோக்கம் அரசிற்கு இல்லை. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்கு அஞ்சும் தலைவர் கிடையாது.

முன்கூட்டியே தேர்தலை நடத்தித்தான் பழக்கம். எனவே, தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை.

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை அவர்களுக்கு வழங்க வேண்டும் என நாமல் தெரிவித்தார். (நி-5)

# இலங்கைக்கான உதவிகளை குறைத்தது ஜப்பான்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதனை ஜப்பானிய அரசாங்கம் குறைத்துக் கொண்டுள்ளதாக தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2020 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கிய மொத்த உதவிகள் 94 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.


ஜப்பானின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருந்த இலகு புகையிரத திட்டத்தை தற்போதைய அரசாங்கம் இரத்து செய்ததைத் தொடர்ந்து இவ்வாறு உதவிகள் குறைக்கப்பட்டுள்ளதாக குறித்த தெற்கு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

# தொடரூந்து தடம்புரள்வு

(கண்டி)

கண்டியில் இருந்து பதுளை நோக்கி பொருட்களை ஏற்றிச் சென்ற சரக்கு தொடரூந்து. வட்டவளை தொடரூந்து நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை தடம்புரண்டுள்ளது.

இதனால், மலைநாட்டு தொடரூந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதென தொடரூந்து கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.(நி-5)



# மோட்டார் சைக்கிள் - கார் விபத்து

## பாதம் துண்டிக்கப்பட்டவர் மருத்துவமனையில்

(புத்தளம்)

அநுராதபுரம் - புத்தளம் பிரதான வீதியின் சாலியவெவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று காருடன் மோதி கோர விபத்து சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரின் பாதம் உடலில் இருந்து தனியாக கழன்றுள்ளது.

ஆபத்தான நிலையில் புத்தளம் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்

# கடற்படைத்தளபதியை சந்தித்தார்



(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் புதிய உயர்ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி நேற்று முன்தினம் கடற்படைத் தலைமையகத்தில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவை சந்தித்தார்.

பெப்ரவரி 2 ஆம் திகதி அன்று இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகராக உமர் பாரூக் புர்கி நியமிக்கப்பட்டதன் பின்னர் கடற்படைத் தளபதியுடனான மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## துன்பங்களைத் துரத்தும் வழி

வாழ்க்கையில் பிரச்சினை இல்லாதவர்கள் நூற்றுக்கு ஒருவர் என்றால் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர்.

துன்பங்களை எண்ணித் துவண்டு போகிறவர்கள் மேலும் மேலும் பிரச்சினை வலைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள்.

நாம் வாழ வேண்டும். எப்படிப்பட்ட பிரச்னையும் சமாளிக்க வேண்டும் என்றெல்லாம் நம்பிக்கையோடும் துணிவோடும் செயல்பட வேண்டும்.

• துன்பம் கொள்ளாமல் பிரச்னைகளுக்கு விடை காண முயல்பவர்கள் தாம் வெற்றியுடன் வாழ முடியும்.

ஏழைகள் நினைக்கிறார்கள் – பணக்காரர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று.

இதில் உண்மையில்லை. நம்மிடமுள்ள பணம் தான் நம் தொல்லைகளுக்கெல்லாம் காரணம் என்று பணக்காரர்கள் எண்ணுகிறார்கள் .

இதுவும் உண்மையல்ல. இரவும் பகலும் எப்படி மாறி மாறி வருகிறதோ அப்படியே துன்பங்களும் இன்பங்களும் தொடர்ந்து வருகின்றன.

பணக்காரனுக்கு பசிக்கவில்லையே என்ற துன்பம் புசிக்க ஒன்றுமில்லையே என்பது ஏழையின் துன்பம்.

உடை விடயத்ததில் எதைப் போட்டுக்கொள்வது என்று வசதி படைத்தவனும் தவிக்கிறான் வசதியற்றவனும் தவிக்கிறான்.

ஆக வாழ்க்கையிலுள்ள வசதிகளோ, பொருளோ, பணமோ மட்டும் நம் துன்பத்திற்குக் காரணமில்லை.

மாறாக இவ்விரு பிரிவினருள்ளும் வளமான மனம் படைத்தவர்களே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதற்காக அடிப்படைத் தேவைகள் ஏதுமின்றி வளமான மனம் ஒன்றைக் கொண்டே காலத்தை ஓட்டிவிட முடியும் என்று பொருளல்ல.

இத்தகைய வசதிகளை அடைய வளமான மனத்தின் மூலம் பெறப்படும் திறமையும் முயற்சியுமே அவசியம் என்பதை உணர்ந்தால் போதுமானது.

ஆக துன்பங்களே நம்மை அணுகக் கூடாது என்று எண்ணுவதைவிட துன்பங்கள் வந்தடைந்தால் அவற்றை சமாளிக்கும் மனப்பக்குவம் நம்மிடம் இருக்க வேண்டுமே என்பதில் அக்கறையாக இருங்கள்.


இந்த இரண்டையும் வேறுபடுத்தி அறியும் விழிப்புணர்வு மட்டும் ஏற்பட்டுவிட்டால் சிந்தனை சிறக்கும், வழி பிறக்கும், துன்பங்கள் எதுவானாலும் சிதறி ஓடும். எனவே மனத்தை மட்டும் விட்டுவிடாதீர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொசுவின் பாடல்



கொசுவால் கன்னத்தில் அறைந்துகொண்ட ஞாபகம் உள்ளவர்களுக்கு கொசுவின் பாடலைப் பற்றிய இந்தக் கதை நன்றாகப் புரியும்.

கால்பந்து விளையாட்டு மைதானத்தின் அளவுக்குப் பெரிய இடத்தில் ஒரே ஒரு மனிதரும் ஒரே ஒரு கொசுவும் மட்டுமே இருந்தால் கூட, அந்த ஒரே மனிதரைக் கண்டுபிடித்து காதுகளில் தன் பாடலை இசைக்கும் அந்த ஒரே கொசு.

ஒரு காலத்தில் காது ஒரு பெண்ணாக இருந்தது. மிகவும் அழகான பெண். அவளைத் திருமணம் செய்து கொள்ள பூமியில் இருக்கும் எல்லா உயிரினங்களும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

பெரியவை, சிறியவை, வேகமானவை, மெதுவானவை, ஒல்லியானவை, குண்டானவை என்று பலவிதமான உயிர்களும் காதிடம் வந்து தங்கள் திறமையைக் காட்டி கவர முயற்சித்தன.

விதவிதமான வித்தைகளை பல உயிரினங்கள் செய்து காட்டின. அவற்றைப் பார்த்த காது யாரை கல்யாணம் செய்து கொள்வது என்று தெரியாமல் குழம்பியது. அப்போதுதான் கொசு அங்கே வந்தது.

கொசு நேரே காதுக்கு அருகே சென்று, "நீ என் மனைவியாக என்னுடனே இருப்பாயா?" என்று கேட்டு விட்டது. கொசு திடீரென பக்கத்தில் வந்து இப்படிச் சொன்னதைக் கேட்டு காது பயந்து போய் விட்டது. "எத்தனை பேர் எனக்காக இங்கே வந்திருக்கிறார்கள் பார்த்தயா?" என்று கொசுவைப் பார்த்துக் கேட்டது.

"இத்தனை உயிரினங்கள் இருக்கும் போது நீ எப்படி துணிந்து என்னிடம் இப்படி சொன்னாய்? உன்னிடம் என்ன விசேடமான திறமை உள் ளது? நீ ரொம்ப பல வீனமாக இருக்கிறாய்.

இந்த வாரத்திற்குள்ளேயே நீ செத்துப் போய் விடுவாய்... உன்னை கண்டிப்பாக கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று கோபமாக கத்தி விட்டது காது. அந்த அசதியில் அப் படியே உட்கார்ந்து கொசு மறுபடியும் தன் அருகே வராமல் கையை விசிறி போல ஆட்டிக் கொண்டே இருந்தது.

நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்த மற்ற உயிரினங்கள் எல்லாம் தங்களுக்குள் கொசுவைப் பற்றி கிசு கிசுவென்று பேசிக் கொண்டு சிரித்-தன. இதனால், கொசுவின் மனசு புண்பட்டு விட்டது.

சோகத்துடன் அங்கிருந்து சென்றது. காது சொன்னபடியே வாரம் முடிவதற்குள் கொசு மறைந்து விட்டது. காது தலையை திருமணம் செய்து கொண்டு அதனுடனேயே தங்கிவிட்டது.

இதற்குப் பின் எல்லாக் கொசுக்களும் காதை எங்கே பார்த்தாலும் உடனே பக்கத்தில் சென்று, "ம்மீ ரீ, மீ ஓ டீ கூ" என்று பாடத் தொடங்கி விட்டன. அதன் பொருள், "இதோ ...நான் இங்கே இருக்கிறேன், செத்துப் போகவில்லை".

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




காணும் இடம் எல்லாம் அது கதைகளைப் பெற்றிருந்தது. முனிவர்களின் அற்புதங்கள் சொற்பதங்களாகப் பேசப்பட்டன. இதைப் போலவே காணும் காட்சிகள், செல்லும் இடங்கள், கடக்கும் ஆறுகள், தங்கும் சோலைகள் இவற்றின் பெயர்களையும் வரலாறுகளையும் கேட்டு அறிந்தனர்; நடை வருத்தம் மறந்தனர்.

அவர்கள் நடக்கும் வழியில் வெப்பம் மிக்க பாலை நிலம் ஒன்று குறுக்கிட்டது. அறம் சாராதவர் மூப்புப் போல் அது அழிவைப் பெற்று இருந்தது. குடிக்க நீரும், உண்ண உணவும், தங்க நிழலும் கிடைக்காத கொடிய காடாக இருந்தது.

காட்டு விலங்குகளும் அந்த மேட்டு நிலத்தில் நடப்பதைத் தவிர்த்தன. அதன் வெப்பம் தாங்க வொண்ணாததாய் இருந்தது.

அதை நீக்கும் செப்பம் தேவைப்பட்டது. மாமுனிவன் உபதேசித்த மந்திரங்களைச் சொல்லி, இவர்கள் பசியும் நீர் வேட்கையும் நீங்கினர். சுற்றுப்புறம் வெம்மை நீங்கித் தண்மை அளித்தது. "அம் மந்திரம் பிரம்ம தேவனால் விசுவாமித்திரருக்கு அளிக்கப்பட்டது" என்பதைக் கேட்டு அறிந்தனர்.

### பாலை நிலம்

இதுவரை நடந்து வந்த வழிகளில் எல்லாம் பசுஞ்சோலைகளைக் கண்டவர் இங்கு மட்டும் ஒரு பாலை நிலம் இருப்பது வியப்பைத் தந்தது.

செடி, கொடிகள், மரங்கள் பிடுங்கி எறியப் பெற்றுச் சருகுகளாக உலர்ந்து கிடந்தன. யாளிகளும் யானைகளும் மானும் மாடுகளும் உலவித் திரிந்த இடம் அது; அவற்றின் வற்றி உலர்ந்த எலும்புக்கூடுகள் அவற்றின் சரிதத்தைச் சொல்லிக் கொண்டு இருந்தன; சிங்கமும் புலியும் ஒன்று இரண்டு ஒதுங்கித் திரிந்து கொண்டிருந்தன; அவையும் சினம் அடங்கிச் சிறுமை உற்று இருந்தன.

அங்கே வாழ்ந்த உயிரினங்கள் என்ன ஆயின? களப்பலி கொள்ளும் காளி கோவில் முற்றம் போல் இரத்தம் புலர் ந்த தரைகளும் எலும்பின் சிதைவுகளும் புலால் நாற்றம் வீசிக் கொண்டிருந்தன.

அழிவுச் சின்னங்கள் அலங்கோலப் பின்னங்கள் அவற்றின் வரலாற்றைக் கேட்க ஆர்வத்தைத் தூண்டின.

"இவை அரக்கர்களின் அழிவுச் செயலாகத்தான் இருக்க வேண்டும்; இதற்குக் காரணம் யார்?" என்று இளைஞர் வினவினர்.

மாமுனிவருக்குப் பேச ஒரு வாய்ப்புக் கிடத்தது. எதைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரோ அதைச் சொல்லத் தக்கதொரு வாய்ப்புக் கிடைத்து.

"தாடகை என்னும் தையலாள் தான் காரணம்" என்றார்.

அரக்கி அவள்; இரக்கமில்லாதவள்; இந்தத் தண்ட காருணிய வனமே அவள் கொடுமைக்கு ஆளாகி விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிவிடுவான்.
– காரவான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எதிர்ப்பை வெளிக்காட்டாத தென்னிலங்கை மக்கள்

அரிச்சந்திர மயான காண்டத்தின் கட்டத்தில் இலங்கை உள்ளது. நிலைமை இப்படியே போனால் எதியோப்பியா, சோமாலியா ஆகிய நாடுகளின் கதிக்கு இலங்கை வந்துவிடுமோ என்று ஏங்குமளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமை இருக்கிறது.

இதுதவிர, மருந்துப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நினைக்கும்போது கடவுளே! இந்த அவலம் எங்கு போய் முடியும் என்று இதயம் பதறுகிறது.

ஆம், சாதாரண காய்ச்சல் தலையிடிக்குப் பயன்படுத்தக்கூடிய பனடோலுக்குக்கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதெனும்போது, நிலைமை எப்படியுள்ளதென்பதைப் புரிந்து கொள்வதில் கடினமில்லை.

ஆக, அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோதிலும் அரசாங்கத்துக்கு எதிராகக் கோசம் போடுவதை சிங்கள மக்கள் தவிர்த்தும் தணித்தும் வருகின்றனர் என்பது தெரிந்த விடயமே.

பொருளாதார வீழ்ச்சி பற்றி உணரப்பட்டபோது, பௌத்த பிக்குகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகக் கோசமெழுப்பத் தொடங்கினர்.

அந்தக் கோசம் உச்சஸ்தாயியை அடைவதற்கு முன்னதாக அடங்கிப் போனதுதான் ஆச்சரியமான உண்மை.

சீனாவின் ஊடுருவல், பொருட்களின் அதீத விலையேற்றம், எரிவாயுவுக்கான தட்டுப்பாடு, பால்மா வகைகளின் கிடையாமை எனப் பல்வேறு விடயங்களை முன்வைத்து, பௌத்த பிக்குகள் அரசாங்கத்துக்கு எதிராகச் கோசமெழுப்பினர்.

அதிலும் குறிப்பாக ஆனந்த தேரர், ஞானசார தேரர் போன்றவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டபோது, சிங்கள எதிர்க்கட்சிகளும் சிங்கள மக்களும் உத்வேகம் கொண்டு அரசாங்கத்தை எதிர்த்தனர்.

போதாக்குறைக்கு தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கின.

எனினும் அரசாங்கத்துக்கு எதிரான கோசங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் சடுதியாக நின்று போயின.

அப்படியானால், நாட்டின் பொருளாதாரம் மீள்எழுச்சி பெற்றுவிட்டதா? என்றால் இல்லை. பொருளாதாரம் இன்னும் படுமோசமாகிவிட்டது என்றே கூறவேண்டும்.

உண்மையில் பொருளாதாரம் தொடர்ந்து இறங்குமுகமாக இருக்கையில், அரசாங்கத்துக்கு எதிரான கோசம் இன்னும் வலுப்பெற வேண்டும்.

ஆனால் அது நடக்கவில்லை. மாறாக தென்பகுதியில் அமைதி நிலவுகிறது. இந்த அமைதிக்குப் பின்னால் இருக்கக்கூடிய வலுவான காரணம் என்ன? என்று ஆராயும்போதுதான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக நாம் கோசம் எழுப்பினால் அது தமிழ் இனத்துக்குச் சாதகமாகிவிடும்.

ஆகையால் நாடு கந்தறுந்து காவடி எடுத்தாலும் சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடக்கூடாது எனப் பௌத்த பிக்குகள் ஓதிவைத்துள்ளனர். இதனாலேயே தென்பகுதி அமைதி காக்கிறது.

ஆனாலும் சிங்கள மக்களின் அடிவயிறு பற்றி எரியும்போது, பின்னையிட்ட தீ தென்னிலங்கையில் மீண்டும் பற்றிக் கொள்ளவே செய்யும்.

## திட்டமிடலில்லாத ஜனாதிபதியும் அரசாங்கமும்

### செல்வம் எம்.பி குற்றச்சாட்டு

(வவுனியா)

திட்டமில்லாத அரசாங்கமும் திட்டமிடல் இல்லாத ஜனாதிபதியுமே காணப்படுகின்றது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். வவுனியா பாரதிபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

விவசாயிகளின் வயிற்றில் கை வைத்ததால் இன்று அரசாங்கம் மிக மோசமான நிலைக்கு சென்றுள்ளது. இன்றைய விலைவாசி உயர்வால் சாதாரணமான மக்களுக்கு வருமானம் குறைவாக உள்ள நிலையில் பொருட்களின் விலை அதிகமாக காணப்படுகின்றது.

விலை நிர்ணயம் இல்லாமல் போய்விட்டது. தற்போது அறுவடை இடம்பெறும் நிலையில் விவசாயிகளுக்கு போதிய விளைச்சல் இல்லாமல் காணப்படுகின்றது.

ஒரு திட்டமில்லாத அரசாங்கமும் திட்டமிடல் இல்லாத ஜனாதிபதியுமாக காணப்படுகின்றது.

10 ஏக்கர் விவசாயம் செய்தவர்களை 2 ஏக்கரை இயற்கை முறையில் செய்யுங்கள் என கூறியிருக்கலாம். இல்லையேல் இயற்கை முறையில் விவசாயம் செய்பவர்களுக்கு நெல்லினை 100 ரூபாய்க்கு பெறலாம் என தெரிவித்திருந்தால் ஏதாவது முயற்சி செய்து விவசாயிகள் செய்திருப்பார்கள். பழக்கம் இல்லாத விவசாயி இதனை செய்ய முடியாதுள்ளது.

வவுனியாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முயற்சி செய்து கடந்த அரசாங்கத்தால் யாழ். பல்கலைக்கழகத்துடன் இருந்த வளாகம் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. இதனை ஜனாதிபதி திறந்து வைக்கின்றார். நம் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் வரவேற்பு நுழைவாயில் காணப்பட்டது. ஆனால் தற்போது தமிழ்மொழி அகற்றப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் போது சிங்கள மொழியே தெரியவேண்டுமாம். அரசியல் அமைப்பில் தமிழ், சிங்கள மொழிகள் சம அந்தஸ்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறுள்ள மொழிக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. ஆனால் மொழிக்காகவும் நிலத்திற்காகவுமே நாம் பல போராட்டங்களை செய்தோம். ஆனால் இன்று அது புறக்கணிக்கப்படுகின்றோம் எனத் தெரிவித்தார். (ம-299)

## இ.போ.ச பேருந்து - கார் வவுனியாவில் விபத்து

### 5 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் காருடன் இ.போ.சபை பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மதியம் நடைபெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கார் கனகராயன்குளம் பகுதியில் வீதியின் எதிர் திசைக்கு திரும்ப முற்பட்டுள்ளது.

இதன்போது அதே பாதையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து காருடன் மோதி விபத்துக்குள்ளானதுடன் பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பாதையினை விட்டு விலகி அருகேயிருந்த ஓர் காணியினுள் புகுந்தது.

இவ் விபத்தில் 5 பேர் காயமடைந்ததுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

## யானைக் குட்டியை துன்புறுத்தியவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை ஹபரணை வீதியில் யானைக் குட்டியை பயமுறுத்தி துன்புறுத்தும் வகையில் டிக் டொக்கில் காணொளி செய்து வெளியிட்ட சாரதி வன ஜீவராசி அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின்னேரிய தேசிய பூங்காவின் பாதுகாவலர் உள்ளிட்ட வனவிலங்கு அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, கெக்கிராவ பிரதேசத்தைச் சேர்ந்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார்.

இலங்கையில் டிக் டொக் எடுக்கப்பட்ட காணொளியில் வாகனம் ஒன்றின் சாரதி வீதியில் சென்ற யானைக் குட்டி ஒன்றை நெருங்கி செல்வதையும், அதை குறுக்கிட்டு விரட்ட முயற்சிப்பதுமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த காணொளி சமூக வலைதளங்களில் வெளியானதை தொடர்ந்து கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### வாழ்வின் ஆரம்பம்

- மிக உயர்ந்த நிலை தனிநிலை. சிலர் பயப்படுவது போல், கடற்பஞ்சு அல்லது கல் போன்ற ஒரு நிலை அல்ல என்பதைப் புரிந்து கொள்வது தான் இதில் உண்மையிலேயே கடினமான பகுதி. அவர்களைப் பொறுத்தவரை இரண்டு நிலைகளே உள்ளன. ஒன்று கல் நிலை, மற்றொன்று கருத்து நிலை.
- வாழ்வு என்பதை இந்த இரண்டு நிலைகளுக்குள் வரையறுக்க அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? கருத்து அல்லது எண்ணத்தைவிட எல்லையற்ற அளவு உயர்ந்த நிலை ஒன்று இல்லையா?
- ஒளியின் அதிர்வுகள் மிகக் குறைவாக இருக்கும்போது நாம் ஒளியைக் காண்பதில்லை. அதிர்வுகள் சற்று அதிகரிக்கும்போது ஒளி நம் கண்களுக்குப் புலனாகிறது. அவை இன்னும் அதிகரித்தாலும் நாம் ஒளியைக் காண முடிவதில்லை. அது நமக்கு இருளாகி விடுகிறது.
- இறுதியில் நிலவிய இருளும், முதலில் நிலவிய இருளும் ஒரே மாதிரியானவையா? இல்லவே இல்லை, இரண்டும் இரு துருவங்கள்.
- கல்லின் எண்ணமற்ற நிலையும், கடவுளின் எண்ணமற்ற நிலையும் ஒன்றா? ஒருபோதும் இல்லை.
- கடவுள் சிந்திப்பதில்லை. அவர் ஆராய்வதில்லை. அவர் ஏன் ஆராய வேண்டும்? ஆனால் அவர் அறியாதது ஏதாவது உண்டா? அப்படி ஏதாவது இருந்தால் அல்லவா அவர் ஆராய்ந்து அறிய வேண்டும்.
- கல் ஆராய முடியாது. கடவுள் ஆராய்வதில்லை. இது தான் கல்லுக்கும், கடவுளுக்கும் உள்ள வேறுபாடு.
- தத்துவ அறிஞர்கள் எண்ணத்திற்கு அப்பால் செல்லப் பயப்படுகின்றனர். எண்ணத்திற்கு அப்பால் அவர்கள் எதையும் காண்பதில்லை.
- ஆராய்ச்சி அறிவிற்கு, தக்க அறிவிற்கு அப்பால் எவ்வளவோ உயர்ந்த நிலைகள் உள்ளன. உண்மையில் ஆன்மிக வாழ்க்கையின் முதற்படியே புத்திக்கு அப்பால்தான் இருக்கிறது.
- எண்ணத்தையும், புத்தியையும், ஆராய்ச்சியையும் கடக்கும் போது தான் கடவுளை நோக்கி முதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள்.
- அது தான் வாழ்வின் ஆரம்பம். சாதாரணமாக நாம் வாழ்வு என்று கூறுவது வெறும் கருநிலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 16.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயார்

## அமரர் நடராசா சாந்தாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 15.02.2022 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்திலும் (இல.138, நெடுங்குளம் வீதி, அரியாலை) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி வழியாக ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக் கிரியையின் போது உடன் இருந்து உதவிகள் செய்தவர்களுக்கும் தூர தேசங்களில் இருந்து உதவியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.138, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(10142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 பேர்...

15,754 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்று 1,259 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 625,804 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வவுனியா...

தில் இருந்து செயற்படத் தொடங்கிய வவுனியா பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிதியாக கலந்துகொண்ட இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பல்கலைக்கழக பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டினை அங்குரார்ப்பணம் செய்து வைத்ததுடன் பல்கலைக்கழத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தினையும் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-250)

## இளைஞர்...

றாலை படியில் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் சடமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலம் பிற்பகல் வரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்திற்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம -30)

## பாராளுமன்ற...

இருந்த பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

19 ஆக இருந்த பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழில்...

பகுதியில் கூடிய மழைவீழ்ச்சியாக 78.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் யாழ்.திருநெல்வேலியில் 60.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் அச்சுவேலியில் 58.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் வடமராட்சி அம்பனில் 53.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ்ப்பாணம் கோட்டையில் 49.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ். ஸ்ரான்லி வீதிப் பகுதியில் 44.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் தெல்லிப்பழையில் 48.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் சாவகச்சேரியில் 40.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்தார். (ம-18)

## சட்டத்தில்...

படுத்தும் வகையிலும் நீதித்துறையில் சில திருத்தங்களை கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாகவும் கூறினார்.

வழக்குகள் பல வருடகாலம் தாமதமாவதால் அதனைத் தடுப்பதற்கு மாற்று வழிகள் அவசியமென்றும் தெரிவித்த அவர் மக்கள் சட்டத்தின் மூலம் நியாயமான தீர்ப்பை எதிர்பார்க்கின்றனர். இதன் காரணமாக வழக்குகளில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும்.

சிறுவர் பாலியல் முறைகேடு தொடர்பான வழக்கு ஒன்றை சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த வழக்கு 20 வருட காலம் நடைபெற்றது. அதன் பின்னரே தீர்ப்பு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர் இளம் வயதை எட்டியபோதே தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வாறான தாமதங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

சில வழக்குகள் பரம்பரை பரம்பரையாக தொடர்கின்றன. சில வழக்குகள் 50 வருடங்களுக்கு மேல் தொடர்கின்றன. இதற்கு மாற்று வழி அவசியம் என்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். (ம)

# எமக்கு நடக்கும் அநீதியை திரும்பி பாருங்கள்

## உறவுகள் கோரிக்கை

(வவுனியா)

எமக்கு நடக்கும் அநீதியை பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களும் திரும்பி பாருங்கள் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் சிவானந்தம் ஜெனிற்றா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெற்ற போராட்டத்தின் பின் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பல்கலைக்கழகத்தை திறந்து வைப்பதற்காக வந்துள்ளார். நாம் இதுவரை காலமும் எமது உறவுகளைத் தேடி தெருவில் நின்று 13 வருடங்களாக போராடி வருகின்றோம். கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளையே தேடுகின்றோம். இந்த நாட்டில் நீதி மறுக்கப்பட்ட போதும் நாம் சர்வதேசத்தை நோக்கித்தான் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம் என்றார். (ம-250)

## அமைச்சர்...

அடுத்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ச இந்தியா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்துவரும் சில தினங்களில் அமைச்சர் பசில் ராஜபக்ச புதுடில்லிக்கு செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

இவரது இந்த விஜயம் தொடர்பில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவினால் வழங்கப்படவுள்ள ஒரு பில்லியன் டொலர் கடன் சலுகை தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (ம)

## கன...

தனது டுவிட்டர் பக்கத்தினூடாக இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ள உயர்ஸ்தானிகராலயம் "கனடா அரசாங்கத்தின் ஆட்சேர்ப்பு பிரசாரம் 2022" தொடர்பில் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் விளம்பரங்கள் தவறானவை எனவும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறும் மோசடிகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளது. (ம)

## பால்...

டுப்பாடு இன்றி வழங்குவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே நிதியமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இன்றைய கூட்டத்தின்போது, பால்மா, எரிவாயு, கோதுமை மா மற்றும் சீமெந்து ஆகிய வற்றுக்கு சிறிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் ஏனைய அனைத்து அத்தியாவசிய பொருட்களுக்கும் போதுமான அளவு கையிருப்பு உள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ம)


மெகா பவர்
திகதி 11/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1023
U 25 13 18 24 71
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 04569

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.02.11
சீட்டிழுப்பு இலக்கம் 016
சிம்மம் 07 18 21 25 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2022/02/11
சீட்டிழுப்பு இலக்கம் 4675
P 4 6 0 3 4 2

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 11.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2970
N 45 52 76 79

தன நிதானய
திகதி - 2022.02.11
சீட்டிழுப்பு இலக்கம் - 705
U 17 45 52 63

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1694 திகதி 2022.02.11
P 25 43 71 83

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1478
சீட்டிழுப்பு திகதி: 2022.02.11
ரூ. 4,356,020/-
13 52 60 71 A

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.11
சீட்டிழுப்பு இல: 3813
ரூ. 5,003,800/-
03 51 61 63 A

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,207,031/-
திகதி 2022-02-11
சீட்டிழுப்பு வாரம் 3364
வர்ணம் நீலம்
05 10 21 52
2779180
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,169,800/-

12 கப்பின
G 12 43 57 58 63
சீட்டிழுப்பு வாரம் 828
திகதி 2022.02.11 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 212,175,913/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1652
சீட்டிழுப்பு திகதி 2022/02/11
நிறம் இளஞ்சிவப்பு
தினம் வெள்ளி
V 04 47 74 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,863,734/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 133
சீட்டிழுப்பு திகதி 11.02.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 31 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,361,380/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 54 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை**




(10134)

**தொடர்பு**

## 077 117 8578, 077 814 7389


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை**




(10134)

**தொடர்பு**

## 077 814 7389, 077 117 8578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.